**சகல பரீட்சார்த்திகளுக்கும்,**
**சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனைகள் :**

- சகல பரீட்சார்த்திகளும் முகக்கவசம் அணிதல் வேண்டும்.
- இத்திணைக்களத்தில் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகள் காணப்படுவதனால் பரீட்சார்த்தியுடன் ஏனையவர்கள் உட்பிரவேசிப்பதைத் தவிர்க்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். சுகாதாரப் பாதுகாப்பு நிலமைகளைக் கருதி பரீட்சார்த்திகள் மாத்திரம் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள்.

**பரீட்சைக்கான அறிவுறுத்தல்கள் :**

1. **பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்** - நீங்கள் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் அல்லது நிறுவனத் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரையிடப்படல் வேண்டும்.
2. செவிமடுத்தல் திறன் பரீட்சைக்காக இத்திணைக்களத்திற்கு வருகை தரும் தினம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நேரத்திற்கு வருகைதர வேண்டியது கட்டாயமானதாகும். எந்தவொரு காரணத்திற்காகவும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தினம் மற்றும் நேரம் மாற்றப்படமாட்டாது.
3. இதன் போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   I. பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு(நிழற்பிரதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
   II. அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதி/க.பொ.த(சா.த) முதலாம் மொழி அல்லது க.பொ.த(சா.த) இரண்டாம் மொழித் தேர்ச்சிக்கான பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
   III. தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்(பணி தொடர்பான அடையாள அட்டை அல்லது ஏனைய அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. )
   IV. ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தில் அல்லது பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் மாற்றம் இருப்பின், சரியான பெயர் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு **நிறுவனத் தலைவரின் கையொப்பத்துடன் அல்லது நிறுவனத் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் பதவி முத்திரையிடப்பட்ட கடிதமொன்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்படும் ஆவணத்தின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.**
4. மேற் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்கத் தவறினால் உங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது. உரிய ஆவணங்களை பின்னர் சமர்ப்பிக்கும் நிபந்தனையின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.
5. விடையளிப்பதற்காக கட்டாயமாக நீல நிறப் பேனா ஒன்றைக் கொண்டுவரல் வேண்டும்.

**பிரின்ஸ் சேனாதீர**
**அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்**

உங்களது அனுமதிப்பத்திரத்துடன் இப் பகுதியை இணைத்து கட்டாயமாக முன்வைத்தல் வேண்டும்.

இப்பரீட்சைக்கு பகுதி அளவிலான அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே தோற்ற முடியும். அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நிறுவனத் தலைவரின் சான்று

திரு/திருமதி/செல்வி …………………………………………………………………………….. அவர்கள் பகுதி அளவிலான அரச சேவை உத்தியோகத்தர் எனவும் 1/2023 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என சான்றுப்படுத்துகின்றேன்.

………………………………………..

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

உத்தியோகபூர்வ முத்திரை

பின்வரும் இணைப்புக்கள் அனுமதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

| இணைப்புக்கள் | உண்டு | இல்லை |
|---|---|---|
| அரசகரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பெறுபேற்றுச் சான்றிதழின் பிரதி/க.பொ.த(சா.த)முதலாம் மொழி அல்லது க.பொ.த(சா.த)இரண்டாம் மொழித் தேர்ச்சிக்கான பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | | |
| பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு | | |
| பெயரில் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் மாற்றம் இருப்பின், அது தொடர்பான ஆவணங்கள் ……………………………………………………… ……………………………………………………… | | |